# <u>மயிலாடுதுறை நகராட்சி</u>

**குறள் :** ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை உயிர்க்கு

**பொருள்:** ஏழைகளுக்கு கொடுப்பது, அதனால் புகழ் பெருக வாழ்வது, இப்புகழ் அன்றி மனிதர்க்குப் பயன் வேறு ஒன்றும் இல்லை.

கூட்ட எண்: 29 /2024

நகராட்சி அலுவலகம்
மயிலாடுதுறை

நாள்: 24.06.2024.

<u>சாதாரணக்கூட்டம்</u>

அன்புடையீர் !

பொருள்: கூட்டம் – மயிலாடுதுறை நகராட்சி – சாதாரணக்கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

மயிலாடுதுறை நகர்மன்ற சாதாரணக்கூட்டம் 2024–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 27.06.2024–ந்தேதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நகர்மன்றத்தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெறும் சாதாரணக்கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(நா. செல்வராஜ்)
நகர்மன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி

**1)** நகராட்சி ஆணையர், பொறியாளர், நகர்நல அலுவலர் ஆகியோர்களின் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்து ஒப்புதல் வழங்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 740, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்து ஒப்புதல் வழங்கப்பட்டது**

**2)** மயிலாடுதுறை நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் பணியாளர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற பயிற்சி மையத்திற்கு 2023–2024 ஆம் ஆண்டு சந்தா தொகை ரூ.2,00,000/–ஐ செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3241/2013/சி1.**

**<u>மன்றத் தீர்மானம் எண். 741, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**3)** மயிலாடுதுறை நகராட்சியில் அலுவலக பணி நிமித்தமாக வெளியூர் சென்று வரும் பணியாளர்களுக்கு பயணப்படி 2024–2025 –ஆம் நிதியாண்டுக்கு வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.230/2017/பி2**
**<u>மன்றத் தீர்மானம் எண். 742, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**4).** நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மயிலாடுதுறை, அவர்களின் உத்தரவு ந.க.எண்.1056/2023/ம.மா, நாள்.07.11.2023 நாள்.28.11.2022 –ன்படி வார்டு எண்–4, பிளாக் எண்–16, சர்வே எண்கள்–762/2, 764/6 மற்றும் 764/7 இல் 3136 சதுரமீட்டர் பரப்பளவில் அமையும் 11 மனைகளை கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி மற்றும் வரைபட ஒப்புதல் எண்.ம.வ/மா.ந.ஊ,அ (ம.மா) எண்: (SW) 39/2023 இன் படி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் சாலை 598.61 சதுர மீட்டர், மற்றும் பொது உபயோகம் 13.00 சதுர மீட்டர், ஆகியவை தானபத்திரம் மூலம் மயிலாடுதுறை எண்1 இணை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 2710/2023 நாள்:07.11.2023 இன்படி மனைப்பிரிவு உரிமையாளர்களான திரு A.சரவணன், A.சந்திரபாண்டி மற்றும் சு.பாஸ்கரன். என்பவர்களால் மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மனைப்பிரிவு அனுமதிக்கான பின்வரும் விவரப்படி கட்டணங்கள் நகராட்சியில் மனைப்பிரிவு உரிமையாளரால் நகராட்சியில் செலுத்தப்பட்டது.

| வ.எண் | கட்டணங்கள் விபரம் | கட்டணம் ரூ | செலுத்துச்சீட்டு எண் மற்றும் நாள் |
|---|---|---|---|
| 1 | மனைப்பிரிவு வளர்ச்சி கட்டணம் | 5000 | 097/001/1/23–24/0040671<br>நாள் : 25.03.2024 |
| 2 | சாலை மற்றும் அடிப்படை வசதிகள் பராமரித்தல் கட்டணம் | 1,00,000 | 097/001/1/23–24/0040670<br>நாள் : 25.03.2024 |
| 3 | மின் விளக்கு கம்பங்கள் அமைத்தல் மின் வாரியத்திற்கு செலுத்தப்பட்டது | 28820 | PGNIOB41142920<br>நாள் : 07.03.2024 |
| 4 | மழைநீர் வடிகால் அமைத்தல் நகராட்சிக்கு செலுத்தப்பட்ட மதிப்பீட்டு கட்டணம் | 1,12,900 | 097/001/01/24–25/0006854<br>நாள் : 13.06.2024 |
| 5 | மின் விளக்கு அமைத்தல் நகராட்சிக்கு செலுத்தப்பட்ட கட்டணம் | 10600 | 097/001/1/24–25/0006855<br>நாள் : 13.06.2024 |

மேலும் சாலை மற்றும் பொதுப்பயன்பாட்டு இடம் நகராட்சி ஆணையர் பெயரில் நில அளவை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது, மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான பாதாள சாக்கடை குழாய், குடிநீர் குழாய் மற்றும் தார் சாலை போடப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் சான்று அளித்துள்ளார். அனைத்து மனைகளுக்கும் நகராட்சியால் காலி மனை வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு நகராட்சியால் இறுதி ஒப்புதல் அளித்து உரிய உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.5689 / 2023/எப்1.**

**<u>மன்றத் தீர்மானம் எண். 743, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**5)** மயிலாடுதுறை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மயிலாடுதுறை அவர்களின் கடிதம் ந.க.எண். 1/2024/SVEEP, நாள். **19.03.2024–**இல் மயிலாடுதுறை நாடாளுமன்றத் தேர்தல் **2024–**இல் வாக்காளர் **100** சதவீதம் வாக்களிக்கும் பொருட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் SVEEP Activities மேற்கொள்ள துண்டு பிரசுரங்கள் **50000** எண்ணிக்கையும், விளம்பர பேனர்கள் **100** எண்ணிக்கையும் மற்றும் selfie modal Flex Frame 100 எண்ணிக்கையும் மயிலாடுதுறை நகராட்சி மூலம் விளம்பரம் செய்திட தெரிவிக்கப்பட்டது. அதன்படி தேர்தல் பணியின் அவசரம் அவசியம் கருதி, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக உத்தரவின்படி துண்டு பிரசுரங்கள் **50000** எண்ணிக்கை, விளம்பர பேனர்கள் **25** எண்ணிக்கை மற்றும் selfie modal frame 6 எண்ணிக்கை ஆகியவை Mayiladuthurai District Prinding Service and Allied Industries Industrial Cooperation Society Ltd, No.2/ Nagai என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட பணிகளுக்கான பட்டியல் தொகை ரூ.**185850/–** ஒரு லட்சத்து என்பத்தைந்தாயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி செலவினம் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 5714/2023/எப்1.**

**<u>மன்றத் தீர்மானம் எண். 744, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**6)** இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களில் ஏலம் போகாத திரு.வி.க மார்க்கெட் கடைகள் மற்றும் திரு.வி.க மார்கெட் சரக்கு கட்டணம் இனம் **01.04.2024** முதல் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே அதற்கு தேவையான ரசீது புத்தகங்கள் அவசர அவசியம் கருதியும், நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்நதாலும், கூட்டுறவு நிறுவனமாக மயிலாடுதுறை மாவட்ட அச்சக சேவை மற்றும் உப தொழில்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிட்., இண்ட், மயிலாடுதுறை நிறுவனத்திடமிருந்து நேரடியாக அச்சடித்து வாங்கபட்டதற்கு பட்டியல் தொகை ரூ.**8260**/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.1398/2021/அ2**

**<u>மன்றத் தீர்மானம் எண். 745, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**7)** மயிலாடுதுறை நகராட்சி **2024–2025** ஆம் நிதியாண்டு தொடங்கிய நிலையில் இந்நகராட்சிக்குட்பட்ட **36** வார்டுகளுக்கும் சொத்துவரி, காலிமனை வரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் பாதாளசாக்கடைக் கட்டணம் ஆகியவைகளுக்கு **2024–2025** ஆம் ஆண்டிற்கான கேட்பு அறிவிப்புகள், கையேடுகள் அவசர அவசியம் கருதியும், நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததால் உள்ளூர் கூட்டுறவு நிறுவனமான மயிலாடுதுறை மாவட்ட பிரிண்டிங் சர்வீஸ் ஐசிஎஸ் நிறுவனத்திடமிருந்து நேரடியாக அச்சடித்து வாங்கப்பட்டதற்கான பில் பட்டியல் தொகை ரூ.**142606/–** அந்நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1834/2023/அ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 746, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**8)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்து உரிமைதாரர்கள் 2024–2025 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்கான சொத்துவரியினை ஏப்ரல் 30 ஆம் தேதிக்குள் செலுத்தும் உரிமையாளர்ளுக்கு 5% ஊக்கத்தொகை அளிப்பது தொடர்பான அறிவிப்பு கடந்த 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-க்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு , 13.04.2023 முதல் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் விதிகள் 2023, நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 84(1)ல் ,Five percent of the net property tax payable by an assessee, subject to a maximum of five thousand rupees shall be granted as an incentive, who has paid the property tax within thirty days from date of commencement of the half-year. அதன்படி, சொத்து உரிமையாளர்கள் தங்களது 2024-25 ஆண்டின் முதல் அரையாண்டிற்கான சொத்துவரியினை ஏப்ரல் 30–ஆம் தேதிக்குள் செலுத்தும் சொத்து உரிமையாளர்கள் ஊக்கத்தொகை பெறுவதற்கு ஏதுவாக இந்நகராட்சி மூலம் துண்டு பிரசுரம், விளம்பர பலகைகள் வைத்தல், ஆட்டோ மூலம் வார்டு வாரியாக ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதற்கு பட்டியல் தொகை ரூ.105290/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல் விதிகள் அமலில் இருந்ததாலும் பட்டியல் தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1258/2022/அ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 747, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**9)** மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் பல்வேறு திட்ட பணிகளை திறந்து வைத்து நல திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு வருகை புரிந்த மாண்பு மிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்றும் இந்நகராட்சியில் நடைபெற்று முதல்வர் அவர்களார் துவங்கப்பட உள்ள பணிகளின் விபரத்தை மாலை தமிழகம் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.23,100/- ஐ வழங்கிட கோரி மாலை தமிழகம் நிறுவனத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி அத்யாவசிய பிரசுர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மாலை தமிழகம் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. **மன்றம் அனுமதிக்கலாம்**.

**ந.க.எண்.**1045 /2024/**இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 748, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**10)** மயிலாடுதுறை நகராட்சியில் KFW 2023-24 திட்டத்தின் கீழ் இந்நகராட்சி பகுதியில் DESIGN, ENGINEERING, BUILD AND COMMISSIONING OF 9.05 MLD CAPACITY SEWAGE TREATMENT PLANT AT ARUPATHY VILLAGE WITH SEQUENTIAL BATCH REACTOR (SBR) & 0.44 MLD PACKAGED STP AT SITHARKADU INCLUDING OPERATION AND MAINTENANCE FOR TEN YEARS TO MAYILADUTHURAI MUNICIPALITY IN TAMILNADU ON DESIGN, BUILD, OPERATE AND TRANSFER (DBOT) BASIS (PHASE – II)பணிக்கு தென்னிந்திய அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் தென்னிந்திய அளவில் ஒரு தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.1,37,708/- ஐ வழங்கிட கோரி விப்ராஸ் ஆட்ஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது எனவே, மேற்படி அத்யாவசிய பிரசர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து விப்ராஸ் ஆட்ஸ், சென்னை நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. **மன்றம் அனுமதிக்கலாம்**.

**ந.க.எண்.** 000946/2024/இ1

**<u>மன்றத் தீர்மானம் எண். 749, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**11)** மயிலாடுதுறை நகராட்சியில் 15–மத்தியநிதிக்குழு மானியம் (Un tied Grant) 2023–24ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட 12 எண்ணிக்கையிலான பழுதடைந்துள்ள சாலையினை சீரமைக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மாநில அளவில் ஒரு தமிழ் மற்றும் ஒரு ஆங்கில தினசரி நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.59,745/-ஐ வழங்கிட கோரி விப்ராஸ் ஆட்ஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது எனவே, மேற்படி அத்யாவசிய பிரசுர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து விப்ராஸ் ஆட்ஸ், சென்னை நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. **மன்றம் அனுமதிக்கலாம்**.

**ந.க.எண்.** 000912/2024/இ1

**<u>மன்றத் தீர்மானம் எண். 750, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**12)** மயிலாடுதுறை நகராட்சியில் NUHM 2022-23 திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் பணிக்கு மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு தினசரி நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.4778/- ஐ வழங்கிட கோர சுதா ஆட்ஸ் சென்னை நிறுவனத்திமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது, எனவே மேற்படி அத்யாவசிய பிரசுர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய்நிதியிலிருந்து சுதா ஆட்ஸ் சென்னை நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. **மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.** 0194/2024/இ1

**<u>மன்றத் தீர்மானம் எண். 751, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**13)** மயிலாடுதுறை நகராட்சியில் 15–மத்தியநிதிக்குழு மானியம் (Un tied Grant) 2024–25ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட 11 எண்ணிக்கையிலான பழுதடைந்துள்ள சாலையினை சீரமைக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மாநில அளவில் ஒரு தமிழ் மற்றும் ஒரு ஆங்கில தினசரி நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.91,823/-ஐ வழங்கிட கோரி விப்ராஸ் ஆட்ஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது எனவே, மேற்படி அத்யாவசிய பிரசுர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து விப்ராஸ் ஆட்ஸ், சென்னை நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. **மன்றம் அனுமதிக்கலாம்**.

**ந.க.எண்.** 000913/2024/இ1

**<u>மன்றத் தீர்மானம் எண். 752, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**14)** மயிலாடுதுறை நகராட்சியில் NSMT 2024-25 திட்டத்தின் கீழ் இந்நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண் 1 முதல் 36வரையிலான பகுதிகளில் சேதமடைந்துள்ள சிமெண்ட் சாலைகளை சீரமைக்கும் பணிக்கு மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மாநில அளவில் ஒரு தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.74,550/- ஐ வழங்கிட கோரி விப்ராஸ் ஆட்ஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது எனவே, மேற்படி அத்யாவசிய பிரசர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து விப்ராஸ் ஆட்ஸ், சென்னை நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. **மன்றம் அனுமதிக்கலாம்**.

**ந.க.எண்.** 0945/2024/இ1

**<u>மன்றத் தீர்மானம் எண். 753, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**15)** மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் பல்வேறு திட்ட பணிகளை திறந்து வைத்து நல திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு வருகை புரிந்த மாண்பு மிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்றும் இந்நகராட்சியில் நடைபெற்று முதல்வர் அவர்களால் துவங்கப்பட்ட பணிகளின் விபரத்தை தினமணி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.19,320/- ஐ வழங்கிட கோரி Express publication (Madurai) Private Limited நிறுவனத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி அத்யாவசிய பிரசுர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து Express publication Madurai Private Limited நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. **மன்றம் அனுமதிக்கலாம்**.

**ந.க.எண்.**1046 /2024/இ1

**<u>மன்றத் தீர்மானம் எண். 754, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**16)** மயிலாடுதுறை நகராட்சியில் CGF- O&M 2023-24 திட்டத்தின் கீழ் இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் உள்ள கழிவு நீரேற்று நிலையம் எண். IV, V,VI,VII, இன் கழிவு நீரேற்றம் கழிவு நீரேற்றம் கழிவு நீரேற்று நிலையம் எண்.VIII-க்கு சென்றடைய புதியதாக நீரேற்று குழாய் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மாநில அளவில் ஒரு தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.53,340/-ஐ வழங்கிட கோரி விப்ராஸ் ஆட்ஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது எனவே, மேற்படி அத்யாவசிய பிரசர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து விப்ராஸ் ஆட்ஸ், சென்னை நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. **மன்றம் அனுமதிக்கலாம்**.

**ந.க.எண். 000914/2024/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 755, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**17)** மயிலாடுதுறை நகராட்சியில் NSMT 2024-25 திட்டத்தின் கீழ் இந்நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண் 1 முதல் 36வரையிலான பகுதிகளில் சேதமடைந்துள்ள சிமெண்ட் சாலைகளை சீரமைக்கும் பணிக்கு மாநில அளவில் குறுகியகால மறுஒப்பந்தப்புள்ளி கோரியதில் மாநில அளவில் ஒரு தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.53,340/- ஐ வழங்கிட கோரி விப்ராஸ் ஆட்ஸ், சென்னை நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது எனவே, மேற்படி அத்யாவசிய பிரசர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து விப்ராஸ் ஆட்ஸ், சென்னை நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. **மன்றம் அனுமதிக்கலாம்**.

**ந.க.எண். 01252 /2024/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 756, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**18)** மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் பல்வேறு திட்ட பணிகளை திறந்து வைத்து நல திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு வருகை புரிந்த மாண்பு மிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்றும் இந்நகராட்சியில் நடைபெற்று முதல்வர் அவர்களால் துவங்கப்பட்ட பணிகளின் விபரத்தை தினகரன் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.64,969.00/- ஐ வழங்கிட கோரி தினகரன் நிறுவனத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி அத்யாவசிய பிரசுர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தினகரன் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. **மன்றம் அனுமதிக்கலாம்**.

**ந.க.எண்.1063 /2024/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 757, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**19)** மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் பல்வேறு திட்ட பணிகளை திறந்து வைத்து நல திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு வருகை புரிந்த மாண்பு மிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்றும் இந்நகராட்சியில் நடைபெற்று முதல்வர் அவர்களால் துவங்கப்பட்ட பணிகளின் விபரத்தை தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.47,644/- ஐ வழங்கிட கோரி The Daily Thandhi நிறுவனத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி அத்யாவசிய பிரசுர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து The Daily Thandhi நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. **மன்றம் அனுமதிக்கலாம்**.

**ந.க.எண்.1176 /2024/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 758, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**20)** மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் பல்வேறு திட்ட பணிகளை திறந்து வைத்து நல திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு வருகை புரிந்த மாண்பு மிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்றும் இந்நகராட்சியில் நடைபெற்று முதல்வர் அவர்களால் துவங்கப்பட்ட பணிகளின் விபரத்தை Evening Tamilnadu ஆங்கில தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.23,100/- ஐ வழங்கிட கோரி Evening Tamilnadu நிறுவனத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி அத்யாவசிய பிரசுர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து Evening Tamilnadu நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. **மன்றம் அனுமதிக்கலாம்**.

**ந.க.எண். 1172 /2024/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 759, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**21)** மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் பல்வேறு திட்ட பணிகளை திறந்து வைத்து நல திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு வருகை புரிந்த மாண்பு மிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்றும் இந்நகராட்சியில் நடைபெற்று முதல்வர் அவர்களால் துவங்கப்பட்ட பணிகளின் விபரத்தை தினமலர் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.36,590/- ஐ வழங்கிட கோரி தினமலர் நிறுவனத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி அத்யாவசிய பிரசுர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தினமலர் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. **மன்றம் அனுமதிக்கலாம்**.

**ந.க.எண். 1316 /2024/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 760, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**22)** மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதாரம் டெங்கு காய்ச்சல் தடுப்புப்பணி இந்நகராட்சிக்குட்பட்ட **36** வார்டுகளிலும், ''வளரும் நிலா மகளிர் சுயஉதவிக்குழு'' மற்றும் ''ஸ்ரீ சாய்பாபா மகளிர் சுயஉதவிக்குழு'' என இரண்டு குழுக்கள் மூலம் **60** எண்ணிக்கையிலான DBC பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி இரண்டு மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்தரவு ஜுன் **2024** அன்றுடன் முடிவடையவுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் மாதாந்திர கூட்டத்தின் வாயிலாக பொதுசுகாதாரத்துறை, இயக்குநர் சென்னை அவர்களின் டெங்கு தடுப்பு நடவடிக்கை வழிகாட்டுதல் கடிதம் எண் R.No.6867512/VCII/S2/2024, நாள்:**15.05.2024**–ன்படி டெங்கு தடுப்பு பணி தீவிர படுத்தகோரப்பட்டுள்ளது. மேலும் இரண்டு மகளிர் சுய உதவிக்குழுவுடன் புதிய உதயம் மகளிர் சுய உதவிக்குழு சேர்த்து மொத்தம் **60** DBC பணியாளர்கள் பணி நீட்டிப்பு செய்திடவும், ஜுலை **2024** முதல் டிசம்பர் **2024** வரை **6** மாத காலத்திற்கு பணியாளர்கள் தினக்கூலி ஊதியம் சுமார் **48,00,000/–** (நாற்பத்து எட்டு லட்சம் மட்டும்) ஆகும் இச்செலவினத்தை இடநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.2478/2022/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 761, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**23)** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொண்டு வருகிறது. இப்பணியில் சேகரிக்கப்படும் மக்காத நெகிழிப் கழிவுகளை எரிபொருளுக்காக சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்படுகிறது. நகராட்சியில் உள்ள டிப்பர் வாகனம் மூலம் தினசரி சென்றாலும் தினமும் சேகரமாகும் குப்பையின் அளவு அதிகமாக உள்ளதால் RRC நிரம்பி வெளியில் கொட்டும் சூழ்நிலை உள்ளது. எனவே தனியார் வாகனம் மூலம் வாடகைக்கு அமர்த்தி அரியலூர் அல்ட்ராடெக் சிமெண்ட் ஆலைக்கு சென்றுவர தேவைப்படும் உத்தேச வாடகை செலவினம் ரூ.**10.00** (இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். /2024/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 762, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**24)** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி ஆணை ந.க.எண்.**35295/2022**/EA2-SEM-5, நாள்:**10.01.2023**ன்படி நகராட்சியில் ஒப்பந்தம் விடப்பட்டு வழங்கிய பணி உத்தரவு ந.க.எண்.**4626/2022**/எச்**1**, நாள்:**24.05.2023**ன்படி **17.06.2023**ல் "சரம் என்விரோ சர்வீசஸ்" தனியார் நிறுவனம் மூலம் பணி ஆரம்பிக்கப்பட்டு ஒராண்டுக்கு ஒப்பந்தம் விடப்பட்டது. இந்நிறுவனத்தின் ஒராண்டு ஒப்பந்த காலம் ஜுன் **2024**இல் முடிவடைவதால் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் பாதிப்படையாமல் இருக்க நிர்வாக நலன் கருதி இந்நிறுவனத்திற்கு மேலும் **3** மாதங்கள் பணி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.4626/2022/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 763, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**25)** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவைப்படும் நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பீளீச்சிங் பவுடர் இருப்பு குறைவாக உள்ளது. எனவே எதிர்வரும் மழை காலத்தை முன்னிட்டு நோய்தொற்று பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கையாக நீர்த்த சுண்ணாம்பு –15 டன் மற்றும் பிளீச்சிங் பவுடர் –15 டன் தேவைப்படுவதால் அதனை வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.9.00 லட்சம் ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.5543/2023/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 764, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**26)** இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரும் நகராட்சி பொறியாளர் குடியிருப்புக்கு பெறப்பட்ட மின் இணைப்பு எண்.522-023-1150 –ன் மின் பயன்பாட்டுக்கு ஜூன் 2024 – வரை ரூ.10,200/- மின் கட்டண நிலுவையும், திருவாரூர் ரோடு பகுதியில் உள்ள பொது கழிவறைக்கு பெறப்பட்ட மின் இணைப்பு எண்.522-018-911-ன் மின் பயன்பாட்டுக்கு மார்ச் 2024 வரை ரூ.2450/- மின் கட்டண நிலுவையும் உள்ளன. இந்த இரண்டு மின் இணைப்புகளும் தொடர்ந்து வேண்டியுள்ளதால் தற்போது, பொறியாளர் குடியிருப்பினை யாரும் பயன்படுத்தாமல் காலியாக உள்ளதாலும், பொது கழிவறை பொது ஏதும் மூலம் நடைப்பெறாததாலும், மின் கட்டண நிலுவை தொகையினை மின்வாரியம் கிழக்கு பிரிவு, மயிலாடுதுறை அலுவலகத்திற்கு மேற்கூறப்பட்ட இரண்டு மின் இணைப்புகளுக்கும் ரூ.12650/- தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. இப்பணிக்கான செலவினத்தினை 2024 – 2025 நிதியாண்டு வருவாய் நிதி வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 5087/2024/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 765, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**27)** இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட புதிய பேருந்து நிலைய பயணிகள் நிழல் இருக்கைகளில் (Passenger waiting shetter) ஒளி வசதியின்றி பொது மக்கள் பாதுகாப்புக்கு ஏற்ற வகையில் இல்லாததோடு, இரவு நேரங்களில் சமூக விரோத செயல்கள் நடைபெற வாய்ப்புள்ளதாகவும், பொது மக்கள் நலன் கருதி ஒளி வசதி செய்திட நகர காவல் ஆய்வாளர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். எனவே, நகராட்சி மூலம் பராமரிக்கபட்டு வரும் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் பயணியர் நிழல் குடைக்கு இரவு நேரத்தில் பயணிகளின் பாதுகாப்புக்கு ஏற்றவாறு ஒளி வசதி செய்திடவும், இப்பணிக்கான மதிப்பீடு செலவிணம் ரூ.3250/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. இப்பணிக்கான செலவினத்தினை 2024 – 2025 நிதியாண்டு வருவாய் நிதி வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 5087/2024/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 766, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**28)** _மயிலாடுதுறை நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரும் சிறு மின் விசை பம்ப் மற்றும் பொது கழிவறை அடிப்படை வசதி பணியில் தற்போது பயன்பாடற்ற நிலையில் உள்ள கீழ்காணும் இடங்களில் உள்ள மின் இணைப்புகளை நிரந்தர மின் துண்டிப்பு முதற்கட்டமாக செய்திடவும், இப்பணியில் இந்த மின் இணைப்புகளுக்கு குறைந்தபட்ச மின் கட்டண நிலுவை ஏதுமிருப்பின் மின் கட்டண நிலுவை தொகையினை மின்வாரியத்திற்கு செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வார்டு எண் | தெருவின் பெயர் | மின் இணைப்பு எண் |
|---|---|---|
| 22 | No.3 புதுத்தெரு, | 522-021-857 |
| 22 | No.3 புதுத்தெரு, | 522-021-1044 |
| 24 | அய்யாரப்பர் கீழ வீதி | 522-015-904 |
| 24 | அய்யாரப்பர் மேல வீதி | 522-015-979 |
| 35 | சுப்ரமணியபுரம் | 522-002-2115 |
| 23 | ஆஞ்சனேயர் கோவில் | 522-018-1630 |
| 22 | No.5 புதுத்தெரு, | 522-021-809 |
| 32 | வடக்கு ஆராயத் தெரு | 522-011-346 |
| 35 | தம்பிக்கு நல்லான் பட்டினம் (கழிப்பிடம்) | 522-020-1467 |

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 5087/2024/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 767, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

29) இந்நகராட்சியில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு 2024–2025–ஆம் ஆண்டிற்கான இட்லி டோக்கன் குறைந்த எண்ணிக்கையில் உள்ளதால் மயிலாடுதுறை மாவட்ட கூட்டுறவு நிறுவனத்திடம் இருந்து அச்சடித்து பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>மன்றத் தீர்மானம் எண். 768, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**<u>30) 36-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. ஆனந்தி ஆனந்தகுமார் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-</u>**

**1.** மயிலாடுதுறை மாவட்டத்தில் வார்டு பிரித்து வரையறை செய்யும் போது **36–**வது வார்டின் ஒரு பகுதியான புளியந்தெரு **35–**வது வார்டில் இணைக்கப்பட்டுவிட்டது. புளியந்தெரு மக்களின் வாக்காளர் பட்டியல் **36–**வது வார்டில்தான் உள்ளது. புளியந்தெருவின் கிழக்கு பகுதி தார்சாலை **36–**வது வார்டில் தான் உள்ளது. எனவே புளியந்தெரு கிழக்கு பகுதி தார்சாலை **36–**வது வார்டுக்கு மாற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த தார்சாலை மிக மோசமான நிலையில் உள்ளதால் விரைவில் தார்சாலை அமைத்து தர மன்றம் தீர்மானிக்க.

**2.** தனது வார்டுகுட்பட்ட பிள்ளையார் தோட்டத்தில் சிமெண்ட் சாலை அமைத்து தர வேண்டி.

**3.** தனது வார்டுகுட்பட்ட PMG நகரில் தார்சாலை அமைத்துத்தர வேண்டி.

**<u>மன்றத் தீர்மானம் எண். 769, நாள்: 27.06.2024</u>**

**அலுவலக குறிப்பு: தீர்மானம் பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

**31) 15-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. ஜெயந்தி உதயகுமார் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுகுட்பட்ட கல்லரைத்தோப்புத்தெரு தார்சாலை அமைத்துத்தர வேண்டி.
2. முதலியார் தெரு தார்சாலை அமைத்துத்தர மன்றம் தீர்மானிக்க,
3. வேலாயுதம் நகர் பூங்காவை புணரமைத்துத்தர மன்றம் தீர்மானிக்க.
4. ரஸ்தா மணவெளித்தெரு கல்லரைத்தோப்புத்தெரு மற்றும் முதலியார் தெரு வடிகால் அமைத்துத்தர மன்றம் தீர்மானிக்க.

**மன்றத் தீர்மானம் எண். 770, நாள்: 27.06.2024**

**அலுவலக குறிப்பு: தீர்மானம் பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

**32) 19-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. கீதா செந்தில்முருகன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

தனது வார்டுக்குட்பட்ட கீழ உடையார் தெரு சாலை பழுதடைந்துள்ளதால் அப்பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்துத்தர வேண்டி.

**மன்றத் தீர்மானம் எண். 771, நாள்: 27.06.2024**

**அலுவலக குறிப்பு: தீர்மானம் பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

**33) 33-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.இரா.நடராஜன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட பஞ்சக்காரத் தெரு மற்றும் சந்தில் உள்ள 20 குடும்பங்களுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கிட ஏதுவாக 3 ஆள் நுழைவு தொட்டி (Man Hole) அமைத்து தர வேண்டி.
2. கோவில் ஆராயத்தெரு ஸ்ரீ சுப்பிரமணிய கோவில் எதிரில் சாலை பள்ளமாக உள்ளதால் 2 அடி உயரத்திற்கு மழை நீர் தேங்கி நிற்கிறது. அப்பகுதியில் சுமார் 20 மீட்டர் நீளத்திற்கு சாலை போர்க்கால அடிப்படையில் அமைத்து தர வேண்டி.
3. கோவில் ஆராயத் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்து மழைநீரை அப்பகுதி ஆராயக்குளத்தில் கொண்டு சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டி.
4. தோப்புத் தெரு செம்மங்குளம் சிறுபாலம் அமைக்க ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு இதுநாள் வரை பணி மேற்கொள்ளாத காரணத்தினால், அந்த ஒப்பந்தத்தினை ரத்து செய்து, புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை செய்து தர வேண்டி.

**மன்றத் தீர்மானம் எண். 772, நாள்: 27.06.2024**

**அலுவலக குறிப்பு: தீர்மானம் பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

**34) 23-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.கு.சதீஷ்குமார் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. வார்டு 23–க்குட்பட்ட பூப்கொள்ளை பகுதியில் 15க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளது அதற்கு குடிநீர் வசதி செய்து தர 130 மீட்டர் பைப்லைன் அமைத்துதர வேண் மற்றும் விடுப்பட்ட பாதாள சாக்கடை அமைத்து தர வேண்டி.
2. ஐயங்குளத்தில் கலைஞர் நகர் புற மேம்பாட்டு திட்டத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் நிலையில் உள்ளது அதற்கு நீர்வரத்து வசதி செய்து தர வேண்டி.
3. மயூரநாதர் தெற்கு வீதி மற்றும் மயூரநாதர் மேல வீதி சாலைகள் பழுதடைந்து மோசமாக உள்ளது அவற்றை சரி செய்து தர வேண்டி.

**மன்றத் தீர்மானம் எண். 773, நாள்: 27.06.2024**

**அலுவலக குறிப்பு: தீர்மானம் பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

**35) 20-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. தனலெட்சுமி அரங்கநாதன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

தனது வார்டுக்குட்பட்ட சின்னசந்து (எ) புது அக்ரஹாரம் பெரிய சந்து, மூர்த்தி நகர் ஆகிய தெருக்களில் தார்சாலை மிகவும் மோசமாக உள்ளதால், மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் தார்சாலை அமைத்து தர வேண்டி.

**மன்றத் தீர்மானம் எண். 774, நாள்: 27.06.2024**

**அலுவலக குறிப்பு: தீர்மானம் பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

**36) 22-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. உஷாராணி ராஜேந்திரன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுகுட்பட்ட 1–வது புதுத்தெருவில் சிதிலமடைந்த சிறுபாலத்தினை அகற்றிவிட்டு புதுபாலம் அமைத்துத்தர வேண்டி.

2. தனது வார்டுகுட்பட்ட 1–வது புதுத்தெரு (மகா ஈஸ்வர் பள்ளி எதிரில்) புதிதாக மினி பவர் பம்பு அமைத்து தர வேண்டி.

3. தனது வார்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நாராயணன் நகருக்கு புதிய தார்சாலை அமைத்து தர வேண்டி.

4. தனது வார்டுக்குட்பட்ட 5–வது புதுத்தெரு முனையில் அமைத்துள்ள பஸ் நிறுத்துமிடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை இடித்து அப்புறப்படுத்திட மன்றம் தீர்மானிக்க.

5. தனது வார்டுக்குட்பட்ட பொட்ட வெளித்தெருவில் உள்ள பொதுக்கழிப்பிடம் யாரும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதாலும், அப்பகுதியில் உள்ள அனைவர் வீட்டிலும் கழிப்பறை வசதி இருப்பதாலும், பொதுக்கழிப்பிடத்தை இடித்து அப்புறப்படத்திட வேண்டி.

**மன்றத் தீர்மானம் எண். 775, நாள்: 27.06.2024**

**அலுவலக குறிப்பு: தீர்மானம் பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

**37) 08-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. இராஜலெட்சுமி இராஜேந்திரன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட திருமஞ்சணவீதி (பிரிமியர் கார்டன்) சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் அப்பகுதிக்கு தார்சாலை அமைத்துத்தர வேண்டி.

2. தனது வார்டுக்குட்பட்ட திருமஞ்சணவீதி ஆற்றங்கரை கிழக்கு பகுதி உள்ள சிமெண்ட் சாலையை சீர் செய்து தர வேண்டி.

3. தனது வார்டுக்குட்பட்ட பாசிக்கடைத்தெரு சாலையில் மழைக்காலங்களில் தேங்கி நிற்கும் மழைநீர் தேக்கத்தை தவிர்க்க, அப்பகுதி சாலையை மேம்படுத்தி மழைநீர் வடிகால் அமைத்து தர வேண்டி.

**மன்றத் தீர்மானம் எண். 776, நாள்: 27.06.2024**

**அலுவலக குறிப்பு: தீர்மானம் பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

**38) 02-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ச. கணேசன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

தனது வார்டுக்குட்பட்ட கீழ்கண்ட தெருக்களில் சாலைகள் போடப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டதால், அப்பகுதிகளில் சாலைகள் அமைத்து தர வேண்டி.

1. குட்டக்குளத்தெரு
2. இராதாநல்லூர் தெரு
3. தெற்கு மடவிளாகம்
4. மேல மடவிளாகம்
5. மாரியம்மன்கோவில் தெரு
6. பில்டெக் நகர்
7. வடக்கு வீதி

**மன்றத் தீர்மானம் எண். 777, நாள்: 27.06.2024**

**அலுவலக குறிப்பு: தீர்மானம் பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

**39) 24-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. வளர்மதி தெய்வநாயகம் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட சின்னக்கண்ணாரத்தெருவில் உள்ள விடுபட்ட பகுதிகளில் தார் சாலை அமைத்துத்தர வேண்டி.

2. தனது வார்டுக்குட்பட்ட திருவாரூர் சாலையில் உள்ள அய்யாரப்பர் நகரில் ரோடு மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு அமைத்து தர வேண்டி.

**மன்றத் தீர்மானம் எண். 778, நாள்: 27.06.2024**

**அலுவலக குறிப்பு: தீர்மானம் பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

**40) 26-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. அ. ராமச்சந்திரன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

தனது வார்டுக்குட்பட்ட புனுகீஸ்வரர் கீழ வீதியில் உள்ள ரூபி காம்ப்ளக்ஸ் பின் புறம் உள்ள காவேரியில் நீண்ட காலமாக பாதாள சாக்கடை கழிவு நீர் ஓடிக் கொண்டிருப்பதை தவிர்க்க, அதற்கு தனியாக பைப்லைன் அல்லது மேனுவல் தொட்டி அமைத்து தர வேண்டி.

**மன்றத் தீர்மானம் எண். 779, நாள்: 27.06.2024**

**அலுவலக குறிப்பு: தீர்மானம் பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

**41)** நகராட்சி எல்லையினை ஒட்டிய கிராம ஊராட்சிகளை நகராட்சியுடன் இணைப்பது தொடர்பாக அரசாணை (நிலை) எண் 142 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள். 23.11.2023 –ல் தமிழக அரசால் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி எல்லையினை விரிவாக்கம் செய்வது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 7145/2023/எம்.ஏ2.

நாள்.15.12.2023. –ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண்:G.O (MS) No.796, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நாள்:28.12.2020–இன்படி நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து மயிலாடுதுறையினை தலைநகராக கொண்டு மயிலாடுதுறை தனி மாவட்டமாக 28.12.2020 முதல் செயல்பட்டு வருகிறது.

**மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குள் கீழ்கண்ட வருவாய் கிராமங்கள் உள்ளடங்கியுள்ளன.**

| | | | |
|---|---|---|---|
| 1. | கூறைநாடு முழுவதும் | 2. | பண்டாரவாடை மாப்படுகை |
| 3. | திருவிழந்தூர் | 4. | சித்தர்காடு |

இந்நிலையில் நகராட்சி எல்லையினையொட்டி அமைந்துள்ள பின்வரும் 10 கிராம ஊராட்சிகளை மயிலாடுதுறை சிறப்பு நிலை நகாரட்சியுடன் சேர்த்து எல்லை விரிவாக்கம் செய்யலாம்.

1. மணக்குடி ஊராட்சி
2. மன்னம்பந்தல் ஊராட்சி
3. நல்லத்துக்குடி ஊராட்சி
4. மயிலாடுதுறை கிராம ஊராட்சி
5. பட்டமங்கலம் ஊராட்சி
6. சித்தர்காடு ஊராட்சி
7. மாப்படுகை ஊராட்சி
8. நீடூர் ஊராட்சி
9. திருஇந்தளூர் ஊராட்சி
10. வெள்ளாலகரம் ஊராட்சி.

மேற்கண்ட விவரப்படியான நகர எல்லையினை ஒட்டி அமைந்துள்ள பத்து கிராம ஊராட்சிகளை மயிலாடுதுறை சிறப்பு நிலை நகராட்சியுடன் இணைத்து நகர எல்லையினை விரிவாக்கம் செய்வது தொடர்பான உரிய பிரேரணை தயார் செய்து அரசிற்கு அனுப்பிவைத்திட மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்: 6267 /2024/எப்1, நாள்:07.06.2024**

**மன்றத் தீர்மானம் எண். 780, நாள்: 27.06.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**42) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் பாதாள சாக்கடை திட்ட பணியில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் M/s RD Eco Solution, Sirkazhi. அவர்களது ஒப்பந்தம் 30.06.2024 அன்றுடன் முடிவடைந்து விட்டாதால் தொடர்ந்து இப்பணிகள் நடைபெற தற்பொழுது குடிநீர், மின்சாரம், பாதாள சாக்கடை போன்ற பராமரிப்பு பணிகளுக்கு Out Sourcing முறையில் பணியாளர்கள் நியமித்துக்கொள்ள திட்டக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதால், அரசின் உரிய ஒப்புதல் கிடைக்கும் வரை, மாவட்ட ஆட்சியர் அலுவலக நிர்ணய ஊதிய விகிதத்தில் பணியாளர்களை மட்டும் ஜீலை மாதம் மட்டும் சப்ளை செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டு செலவினத்தொகை ரூ.9.90 ஆகும் அதன் பின்னர், புதிய ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கான செலவினத்தை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத் தீர்மானம் எண். 781, நாள்: 27.06.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**நாள்: 24.06.2024**

**நகர்மன்றத்தலைவர்,**
**மயிலாடுதுறை நகராட்சி.**